6th March 1969]

(இ) அவைகள் ஒவ்வொன்றும் என்ன விலைக்கு விற்கப்பட்டது?

(உ) ஒவ்வொன்றிலும் எத்தனை பிரதிகள் அச்சிடப்பட்டன?

(எ) யார் யாருக்கு இலவசமாக விநியோகிக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : (அ) உலகத் தமிழ் மாநாட்டு விழா மலர், புகாரில் ஒரு நாள்; கலைக் காட்சிக் கையேடு ஆகிய புத்தகங்கள் வெளியிடப்பெற்றன.

(இ) இவை முறையே ரூ. 30, ரூ. 1, ரூ. 15 ஆகிய விலைக்கு விற்கப்பட்டன.

(உ) இவற்றில் முறையே 10,000, 5,000, 5000 பிரிதிகள் அச்சிடப்பட்டன.

(எ) அமைச்சர்கள், உயர் அதிகாரிகள், கட்டுரை ஆசிரியர்கள், பத்திரிகை ஆசிரியர்கள், மாநாட்டு வெற்றிக்காக உழைத்தோர் முதலியவர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டன.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, இதில் எத்தனை ரொக்கத்திற்கு விற்கப்பட்டது? எத்தனை இலவசமாகக் கொடுக்கப்பட்டது? எத்தனை இப்போது ஸ்டாக் இருக்கிறது? இருந்தால் அங்கத்தினர்களுக்கு ஏதாவது கொடுக்க முடியுமா?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : யார் யாருக்குக் கொடுக்கப்பட்டது என்ற புள்ளி விவரம்தான் இருக்கிறது. எத்தனை கொடுக்கப்பட்டது என்ற கணக்கு இல்லை. அங்கத்தினர்களுக்குக் கொடுக்கலாம் என்ற ஆசை எனக்கு இருக்கிறது. புத்தகங்கள் இருக்கின்றனவா என்று கேட்டிருக்கிறேன்.

U.N. contribution for World Tamil Conference

*141 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether the U.N. Assembly donated Rs. 50,000 for the World Tamil Conference; and

(*b*) the condition subject to which this donation was given?

உலகத் தமிழ் மாநாட்டுக்கு ஐ. நா. நன்கொடை

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) ஐ. நா. சபை உலகத் தமிழ் மாநாட்டுக்காக ரூ. 50 ஆயிரம் நன்கொடையாகக் கொடுத்ததா ?

(இ) என்ன நிபந்தனையுடன் இந்த நன்கொடை கொடுக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : (அ) & (இ) இரண்டாவது உலகத் தமிழ்க் கருத்தரங்கு நடவடிக்கைகளை அச்சிட்டு வெளியிடுவதற்காக யுனெஸ்கோ 48,750 ரூபாய் நன்கொடை வழங்கியுள்ளது,

[6th March 1969

திரு. என். ஆர். தியாகராஜன்: தலைவர் அவர்களே, அவை அச்சிடப்பட்டு வழங்கப்பட்டனவா? விலைக்கு விற்கப்பட்டனவா? அப்படி விற்றதால் எவ்வளவு லாபம் கிடைத்தது?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன்: அரசாங்கத்திற்கும் இதற்கும் சம்பந்தமில்லை. இது ஒரு இந்திய அமைப்பு. மத்திய அரசு மூலமாக யுனெஸ்கோ அனுப்புவது. அதை நாம் கொடுத்தோம்.

Official language

* 142 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(a) the resolution passed regarding the medium of instruction and the official language at the State Education Ministers' Conference held at Delhi, recently; and

(b) the views expressed by the Tamil Nadu Education Minister on behalf of the Government of Tamil Nadu?

ஆட்சி மொழி.

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) அண்மையில் டில்லியில் நடைபெற்ற மாநில கல்வி அமைச்சர்கள் மாநாட்டில், பயிற்சி மொழி, ஆட்சி மொழி பற்றி என்ன தீர்மானம் நிறைவேற்றப் பட்டது?

(இ) தமிழக அரசு சார்பாக கல்வி அமைச்சரால் என்ன பேசப்பட்டது?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : (அ) உயர்நிலைக் கல்வி நிறுவனங்கள் எல்லாவற்றிலும் வட்டார மொழியையே பயிற்சி மொழியாகக் கொள்ளவேண்டும் என்று ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆட்சிமொழி குறித்துத் தீர்மானம் எதுவும் நிறைவேற்றப்படவில்லை.

(இ) வட்டார மொழியே எல்லா நிலையிலும் பயிற்சி மொழியாக இருக்கவேண்டுமென்கிற பரிவுரை இம்மாநில அரசின் முழு இசைவுபெற்றுள்ளதென அம்மாநாட்டில் எடுத்துக் கூறப் பட்டது.

திரு. என். ஆர். தியாகராஜன்: தலைவர் அவர்களே, மத்திய சர்வீஸ் கமிஷன் பரீட்சை 14 மொழிகளிலும் எழுதலாம் என்று கூறியதாகச் செய்தி பத்திரிகையில் வந்தது. அதைப் பற்றிப் பேசப்பட்டது. அதைப் பற்றி இந்த அரசு என்ன நினைக்கிறது?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன்: மகாநாட்டில் பேசியதைப் பற்றித் தகவல் இல்லை. 14 மொழிகள் வருமென்று மத்திய அரசு நீண்டநாளாகச் சொல்லிவருகிறது.